# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1676 - 2010 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2010.10.15

*1676 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1546 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1548 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

### இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பயிலுனர் நிலஅளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பயிலுனர் நிலஅளவையாளர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010.11.04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "நிலஅளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், இல. 150, கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுனர் நிலஅளவையாளர் பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்" எனும் பதம் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தவிர்ந்த வேறு விதங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் அது நிரூபிக்கப்படவும் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த உடற்றகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஈ) கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- (i) சம்பளம்.- இப்பதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திரட்டிய மாதச் சம்பளம் பின்வருமாறு :
பொ. நி. சுற்றறிக்கை இல. : 06/2006 (iv) எம்என் 5ஏ-
ரூபா 16,720 - 10X320-11X365-15X450-ரூபா 30,685

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

(iii) அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொதுவான நிபந்தனைகளுக்கும், 2006.02.27 ஆந் திகதிய 1434/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை நிலஅளவையாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மற்றும் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட அல்லது காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் பயிலுனர் நிலஅளவையாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) நியமனம் பெறுபவர்கள் 6 மாத காலத்திற்கு திணைக்கள விடயங்களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

(ii) அவர்களுக்கு வழங்கப்படும் அரசாங்க களஞ்சியப் பொருட்களுக்காக 25,000 ரூபாவை பிணையாக செலுத்துவதற்கு அவர்கள் கடப்பாடு உடையவர்கள் ஆவர்.

(iii) பயிற்சிக் காலம் முடிவுற்றதும், அவர்கள் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் நிலஅளவையாளர் ஒருவராக ஆறு (06) வருட காலத்திற்கு பணியாற்றுவதற்கு நியமிக்கப்படுவார். அந்நோக்கத்திற்காக நியமிக்கப்படுபவர்கள் 1,50,000 ரூபாவை விடக் குறையாத பெறுமதியுடைய சொத்துக்களை உடைய பிணைமுறி ஒன்றையும் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

5. **கல்வித் தகைமைகள்**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து நிலஅளவையியல் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். இந்த ஆண்டுக்கான நிலஅளவையியல் விஞ்ஞானமாணிப் பட்ட இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளைக் காத்திருக்கும் பட்டதாரி மாணவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். ஆயினும் அவர்கள் தமது பட்டப்படிப்புச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. **தெரிவுசெய்யும் முறை**.- நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும். இதில் நிலஅளவையியல் விஞ்ஞானமாணிப் பட்டப் பரீட்சையில் பெற்ற தகுதி வரிசை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சகல நிலஅளவையியல் விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளும் உரிய தகைமைகளுக்கு அமைவாக இருக்கும் பட்சத்தில் அழைக்கப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சகிதம் நேர்முகப் பரீட்சை சபை முன்னிலையில் சமுகமளிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) பட்டப் படிப்புச் சான்றிதழும் ஏனைய கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் ;

(iii) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(iv) இரண்டு நற்சான்றுப்பத்திரங்கள்.- இவற்றில் ஒன்று கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேல் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும் ;

(v) கணனி தகைமைச் சான்றிதழ்கள் ;

(vi) தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளில் உள்ள அறிவை நிரூபிக்கும் சான்றிதழ்கள் ;

(vii) விளையாட்டுத்துறை சான்றிதழ்கள்.

7. நியமனத்திற்காக வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8. பரீட்சார்த்தி எவரேனும் தகைமையற்றவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர் நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது நேர்முகப் பரீட்சையின்போதோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ அல்லது அதன் பின் எந்த நேரத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு.

எவரேனுமொரு விண்ணப்பதாரர் வேண்டுமென்று ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்திருந்தால் அல்லது தெரிந்துகொண்டு ஏதேனும் முக்கிய தகவல்களை மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

9. ஏற்கனவே அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை எமது திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் எந்தவொரு விண்ணப்பம் தொடர்பிலும் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

அமைச்சரவையின் ஆணைப்படி,

ரி. அசோக்க பீரிஸ்,
செயலாளர்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு.

இல. 80/5, "கொவிஜன மந்திரய",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2010.09.27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் பயிலுனர் நிலஅளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

1. பெயர் :

1.1 முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
உதாரணம் : (SILVA, A.B)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம் /தமிழில்) :----.

1.4 தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

1.5 வழங்கப்பட்ட திகதி :----.

2. முகவரி :-

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களம் /தமிழில்) :----.

2.3 தபால் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. இனம் :-

சிங்களம்-1, தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனையவை-5, ☐
(கூட்டில் பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

3.1 குடியுரிமை :-
(பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமாகவா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுக.

4. பால் :
பெண் -1
ஆண் -0 ☐
(கூட்டில் பொருத்தமான இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :----.

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. கல்வித் தகைமைகள் :-

(i) பல்கலைக்கழகம்/கல்வி நிறுவனம் :----.
(ii) பட்டமும், பட்டம் பெற்ற திகதியும் :----.
(iii) பதிவு இலக்கம், பதிவுத் திகதி :----.
(iv) வெளிவாரி/உள்வாரி
(v) சுட்டெண்
(vi) வகுப்பு (மேல் பிரிவு/கீழ் பிரிவு) :-
(vii) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

8. கணனி விஞ்ஞானம் தொடர்பாக பின்பற்றிய பாடநெறிகள் சம்பந்தமான விபரங்கள் :----.

9. தாய்மொழிக்கு மேலதிகமாக ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சி :----.

10. விளையாட்டுத்துறை சார்ந்த செயற்பாடுகள் :----.

11. ஏனைய தகைமைகள் :----.

12. ஏதேனும் குற்றத்திற்காக நீர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக் கப்பட்டிருப்பின் அவை தொடர்பான அனைத்து விபரங்களையும் தருக :----.

13. ஏற்கனவே நீர் அரசாங்க சேவையில் உள்ளவராக இருந்தால், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியில் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளீரா என்பது பற்றி குறிப்பிடவும் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியுரைக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் பிழையானதென அல்லது பொய்யானதென தெரியவந்தால் நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் அல்லது சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

---------------------------------------------------

நிலஅளவையாளர் நாயகம்,

இந்நிறுவனத்தில் கடமையாற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ............................ அவர்களினால் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என சான்றுபடுத்துகிறேன். மேலும் அவர் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உள்ளாகவில்லை என்பதையும் இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப் பட்டால் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
இறப்பர் முத்திரை.

திகதி :----.

10-493

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, புரட்டாதி 23.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | மகியங்கனை | பிந்தன்ன மேற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பிந்தன்ன பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |

10-506

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**விளையாட்டு அமைச்சு**

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி - 2010/2011**

விளையாட்டு அமைச்சின்கீழ் இயங்கும் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியைப் பயிலுவதற்காக 18-35 (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களினைவிட மேற்படாதிருத்தல் வேண்டும்.) வயதிற்கு உட்பட்ட விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் 6 பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் அவ் ஆறு பாடங்களுள் இரண்டு சிங்களம் அல்லது தமிழ் மற்றும் கணிதம் அல்லது எண்கணிதமாக இருத்தல் வேண்டும்.

1.2 அத்துடன் விண்ணப்பதாரி- :

(அ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவின் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது அவ்விளையாட்டு விழாவின் மாவட்ட மட்ட போட்டியில் தனியாள் நிகழ்வு ஒன்றில் முதலாம் இடத்தை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது குழுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப் படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் தனியாள் நிகழ்வு ஒன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது குழுப்போட்டியில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தனிப் போட்டியொன்றில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல் ; அல்லது குழுப்போட்டியொன்றில் வீரமுதன்மை வெற்றி யினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக தெற்காசிய போட்டிகள், ஆசிய வீரமுதன்மைப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், பொதுநலவாய நாடுகளின் போட்டிகள், உலகக் கிண்ணப் போட்டிகள் அல்லது ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல் ;

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சில் அல்லது அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களில் அல்லது மாகாண சபைகளின் விளையாட்டு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுதல் அல்லது கல்வி அமைச்சின் விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக கடமையாற்றுதல் (குறிப்பு 1 இன் பிரகாரம் உரிய தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்).

அல்லது

(ஊ) அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான ஆசிரியராக அல்லது ஆசிரியையாக, பயிற்றுவிப்பாளராக (தொண்டராகவும் இருக்கலாம்) இருத்தல், இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளை யாட்டு உத்தியோகத்தராக 5 வருட சேவைக்கால அனுபவத்தைப்பெற்று இருப்பதுடன் தேசிய விளை யாட்டுச் சங்கமொன்றில் பெற்றுக் கொண்ட விளையாட்டு பயிற்றுவித்தற் படிநிலை அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் ;

அல்லது

(எ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்பு பிரிவில் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி விரிவுரையாளராக 6 மாதங்களுக்குக் குறையாமல் ஆரம்ப மற்றும் உயர்தர பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பயின்று பூர்த்திசெய்திருத்தல்.

**முக்கிய குறிப்பு :**

(1) விளையாட்டு அமைச்சின்கீழ் பணியாற்று வோர் 1 வருட சேவைக்காலத்தினையும் கல்வியமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 5 வருட (கல்வியியற் கல்லூரிகளின் உடற்கல்வி ஆசிரியப் பயிலுனர்களுக்கு மாத்திரம் 2 வருடங்கள்) சேவைக்காலத்தினையும் பூர்த்திசெய்திருக்க வேண்டியது கட்டாயமான தாகும்.

(2) உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2. **விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை :**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போல் 8''x13 1/2'' அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்திசெய்து 2010.11.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ''பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2010/2011 விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3 அரச, உள்ளூராட்சிச் சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் அனுப்பப்படும் விண்ணப் பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.4 பரீட்சைக் கட்டணமாக ரூபா 350 செலுத்தப்பட வேண்டியதுடன் அப்பணமானது ''செயலாளர், விளையாட்டு அமைச்சு'' எனும் பெயருக்கு காசுக் கட்டளையாக குருந்து வத்த தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

3. **தேர்ந்தெடுக்கும் முறை.**- இப்பாடநெறிக்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமை பெற்றுள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால்

தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற்தகைமைகாண் செயல்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் உட்படுத்தப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

**4. பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது பின்வரும் 5 பிரிவுகளை உள்ளடக்கியதாகும் :-

(அ) பயிற்சி தொடர்பான பொதுக்கோட்பாடுகள் (உடற்தகைமை மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய முறைகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பொறுப்புக்கள் மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள்) மற்றும் வாய்மூலப் பரீட்சை ;

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவு ;

(இ) தடகள மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம் ;

(ஈ) தடகள மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்கள் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு விளையாட்டு தொடர்பான புலமை (உதைபந்தாட்டம்/ வொலிபோல்/ வலைப் பந்தாட்டம்/கூடைப்பந்தாட்டம்) ;

(உ) விளையாட்டு உடற்கல்வி விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டு புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்தல், விளையாட்டு மருத்துவ விஞ்ஞானம், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் பற்றிய கற்கைகள்.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் வேலையற்ற விண்ணப்பதாரர்களினால் ரூபா 15,000 மும் அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது மாகாண சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களினால் தனிப்பட்ட முறையிலோ அல்லது நிறுவனங்களின் ஊடாகவோ ரூபா 30,000 ஐயும் பாடநெறிக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் பெறுநராக ''செயலாளர், விளையாட்டு அமைச்சு'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். இப்பணமானது எக்காரணங் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

4.4 பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டவராவர்.

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர்களுக்கு விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.

**5. ஏனைய நிபந்தனைகள் :**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ்அமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டுமென இவ்அமைச்சு தீர்மானிக்கும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்பட வேண்டும்.

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கேட்கப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அது தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எஸ். லியனகம,
செயலாளர்,
விளையாட்டு அமைச்சு.

இல. 7ஏ, றீட் மாவத்தை,
கொழும்பு 7.
2010............................

மாதிரி விண்ணப்பப் படிவம்

**<u>தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்</u>**

விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறி - 2010/2011

1. (i) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்) :----.
(iv) தேசிய அடையாள அட்டை இல. :----.

2. முகவரி :-

(i) தனிப்பட்ட :----.
(ii) அலுவலக :----.

3. (i) பிறந்த திகதி :-

ஆண்டு ----, மாதம் ----, திகதி ----.

(ii) 2010.11.15 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் ----, மாதங்கள் ----, நாட்கள் ----.

4. இலங்கைப் பிரசையா/ இல்லையா ? என்ற விபரம் :----.
இலங்கைப் பிரசையாயின் பதிவின் மூலமா அல்லது பரம்பரையினாலா ? என்ற விபரம் :----.

5. (i) பால் (ஆண்/பெண்) :----.

(ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

6. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா ? என்ற விபரம் :----.

(i) சேவை நிலையம் :----.
(ii) தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(iii) தொழிலில் சேவைக்காலம் :----.

7. பெற்றுள்ள கல்வித் தகைமைகள் :-

| வருடம் | பரீட்சையின் பெயர் | விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|---|---|
| | | | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் சான்றிதழ்கள் மற்றும் விசேட சாதனைகள் பற்றி இங்கு குறிப்பிடவும் :----.

9. (i) வர்த்தமானி அறிவித்தலில் உள்ளவாறு நீங்கள் இந்தப் பாட நெறிக்குத் தகுதிபெற பந்தி 1.2. (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) வரையுள்ள எந்தப் பிரிவில் தகுதிபெற்றுள்ளீர்கள் ? : ----.

(ii) குறிப்பிட்ட பந்தியின்கீழ் நீங்கள் பெற்றுள்ள தகைமை பற்றிய விபரங்களைத் தருக :----.

10. வேறு குறிப்புகள் :----.

11. இந்தப் பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான ரூபா 15,000 ஐ அல்லது ரூபா 30,000 ஐச் செலுத் துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :----.

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவையெனவும், நான் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றது அல்லது தவறானது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இப்பாடநெறியை கற்பதற்கு தகுதியற்றவராகக் கருதப்பட்டு பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்**

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,

...................... இல் ......................... ஆகக் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ......................... அவர்களது விண்ணப்பப் படிவத்தைச் சிபார்சு செய்து அனுப்புவதுடன், இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்தில் அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

10-511

---

## அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2010

அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும். போதிய அளவு விண்ணப்பதாரர்கள் தோற்றாத நகரங்களில் அப்பரீட்சை அதை அண்மித்துள்ள நகரத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கோ இரத்துச் செய்வதற்கோ அமைச்சரவை/அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்கீழ் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| பதுளை | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |

2. 2010.01.01 ஆந் திகதியில் நிலவுகின்ற அரச முகாமை உதவியாளர் சேவையில் அதிஉயர் வகுப்பின் வெற்றிடங்களில் 35% ஐ இப்பரீட்சை பெறுபேறுகளின் பேரில் பூர்த்திசெய்யப்படும்.

**3. மாதச் சம்பள அளவுத்திட்டம்.**- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv) இல் MN 07/2006 – A சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதன்படி - ரூபா 20,030 – 11 x 365 – 18 x 500 - ரூபா 33,045 ஆகும்.

**4. தகைமைகள்.**- 2010.01.01 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 ஆண்டு காலப்பகுதிக்குள் முனைப்பான மற்றும் திருப்திகரமாக சேவையாற்றி உள்ள மத்திய அரசைச் சேர்ந்த,

(அ) அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களும்,

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் 08 ஆண்டுகளுக்கு குறையாத முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களும்,

(இ) அரச முகாமை உதவியாளர் சேவையின் I ஆம் II ஆம் வகுப்புக்களில் உள்ள பட்டதாரி அலுவலர்களும் இப்பரீட் சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் ஆவர்.

**குறிப்பு 1.**- திருப்திகரமான சேவைக்காலமும் முனைப் பான சேவைக்காலமும் என்பது சேவை பிரமாணக் குறிப்பின் 2:6, 2:7 ஆம் பந்திகளின்கீழ் வரைவிலக்கணப்படுத்தப் பட்டுள்ளன.

5. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 1.0 தொடக்கம் 5.0 வரை முதலாம் பக்கத்திலும் 6.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 3 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும். அதற்கு ஏற்புடையதான தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் 25.5 X 21 செ.மீ. அளவிலான ஒரு தனித்தாளின் (ஏ4 அளவின்) இரு பக்கங்களையும் உபயோகித்து பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி எம்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற உள்ளாரோ அதே மொழியில் விண்ணப்பத்தை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் 'மொழி மூலம்' தொடர்பான எதுவித மாற்றங்களையும் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும் முழுமைபெறாது தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவிப்பெதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் பூர்த்திசெய்து அனுப்புகின்ற விண்ணப்பங்கள், அதன் நிழற்படப் பிரதிகளுடன் திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தலைவரின் பரிந்துரையை பெற்றுக்கொண்டதன் பின்னர் நிழற்படப் பிரதியை சுயவிபரக் கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பின்னர் அதன் மூலப்பிரதியை தமது திணைக்களத் தலைவர் ஊடாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம்'', இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2010.11.16 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரால் அனுப்புகின்ற விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக வேறு எதுவித விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளையும் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைத்தலாகாது. அத்திகதிக்குப் பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மறுக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் முழுமையானது என திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டியதுடன் விண்ணப்பத்தில் உள்ள சான்றுரையையும் கையொப்பமிட வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அல்லது அத்திணைக்களத்தின் வேறு அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படலாகாது. விண்ணப்பங்களை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2010" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(இ) (i) முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரர்களிடம் இருந்து பரீட்சை கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதாவது பொது எழுதுநர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் இடமிருந்தும் 1985 ஆம் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்களிட மிருந்தும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் இடமிருந்தும் 1999 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அரசு கணக்குப் பதியுனர் சேவையின்/அரச சிறாப்பர் சேவையின் அல்லது பண்டசாலைக் காப்பாளர் சேவையின் அதியுயர் வகுப்பின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் இடமிருந்தும் மற்றும் 2006, 2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பின் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக் குத் தோற்றாத அலுவலர்களிட மிருந்தும் ஆகும்.

(ii) பரீட்சைக்கான கட்டணம் ரூபா 400 ஆகும். விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்குமுன் இக்கட்டணத்தை அண்மித்துள்ள மாவட்டச் செயலகம்/கச்சேரி/பிரதேச செயலகத்திற்கு வருமானத் தலைப்பு 2003 – 02 – 13 இன்கீழ் வரவுவைப்பதற்காக செலுத்த வேண்டும். பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் படப்பிரதி ஒன்றை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனப்படலாம்.

(ஈ) முழுமையுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அல்லது அத்துடன் தொடர்பான ஓர் ஆவணம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பம் தாமதப்படுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

6. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) கிடைத்துள்ள விண்ணப்பங்கள் தொடர்பில் அந்தந்த பரீட்சார்த்திக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பான மண்டப மேற்பார்வையாளருக்கு பரீட்சை தினத்தின்போது சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படாத பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்கென விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் கையாளவேண்டிய ஒரு விதிக்கோவை இவ்வர்த்த மானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்ட

விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(இ) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தி, விண்ணப்பத்தை உரியவாறு பூர்த்திசெய்து விதித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன் அனுப்பி உள்ள விண்ணப்பதாரர்கள் யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார்.

(ஈ) எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு முன் (குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னராவது) தனது அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அது பற்றி ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு உடனே அறிவிக்க வேண்டும். (தந்தி முகவரி : ''பரீட்சை, பத்தரமுல்ல'', பக்ஸ் இலக்கம் : 2784232 ஆகும்.) அனுமதி அட்டை கிடையாமை பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கும் அதேவேளையில் பின்வரும் தகவல்களையும் வழங்க வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பிய உடன் இலங்கை பரீட்சை திணைக்களம் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகையில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளி இடம் என்றால் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட்ட உங்களது கோரிக்கையுடன் நிழற்படப்பிரதியினை தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

**குறிப்பு**.- பரீட்சைக்காக அனுமதி வழங்கப்பட்டமை தகைமைகளை ஏற்றுக்கொள்ளும் சாதனமாக கருதுதல் ஆகாது. எவ்வாறாயினும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தனது தற்றுணிபின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அதன்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படுகின்ற பரீட்சார்த்தி உரிமை பின்னராக உறுதிப்படுத் தப்படும். இல்லாவிட்டால் இரத்துச்செய்யப்படும்.

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- (அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை என பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை முடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற் கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

9. **பரீட்சை மொழி**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்கு சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது வேறு அரச கரும மொழியில் விடையளித்தல் வேண்டும்.

10. **பாடத்திட்டம்**.- எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. அலுவலக முகாமை | 02 மணித்தியாலம் | 100 |
| 2. அலுவலக முறைமைகள் | 02 மணித்தியாலம் | 100 |
| 3. தாபன நடைமுறைகள் | 02 மணித்தியாலம் | 100 |
| 4. அரச நிதி முகாமை | 02 மணித்தியாலம் | 100 |
| 5. பொது வினாத்தாள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| | | 500 |

11. **நியமனத்திற்காக தெரிவுசெய்தல்**.- இப்பரீட்சையில் பெற்றுக் கொள்கின்ற மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கு வரிசைப்படி தகைமை பரிசீலனை செய்வதற்காக அரசாங்க சேவை அமைச்சரவையினால்/ ஆணைக்குழுவால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவொன்றின் முன்நிலைக்கு அழைக்கப்படுவதுடன் அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தெரிவுசெய்யப் படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும் இத்தீவின் எப்பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகமொன்றில் சேவை யாற்றத் தயாராக இருக்க வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்கமறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச்செய்து அடுத்ததாக தகைமையடைந்துள்ளவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

12. அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனை களுக்கும் 2004, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 2004.12.15 ஆந் திகதிய அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் 09/1041/360/034 ஆம் இலக்க 2009.11.11 ஆந் திகதிய அமைச்சரவைக் கடிதத்தின் 03 ஆம் பந்தியின் I ஆம் IV ஆம் பிரிவுகளின்படியும் அப்பிரமாணக் குறிப்பில் தற்போது மேற்கொண்டுள்ள அல்லது இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்பட வுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக நியமனங்கள் செய்யப்படும்.

13. **பாடத்திட்டம்**.- பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் பாடங்கள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுகிறது :-

(1) அலுவலக முகாமை.- அமைப்பு முறைக் கட்டமைப்பு, அமைப்புமுறை கோட்பாடுகள், வேலைப்பகுப்பாய்வும் மதிப்பீடுகளும் தலைமைத்துவம், மேற்பார்வையும் தீர்மானம்

எடுத்தலும், தொடர்பாடல், பொதுசனத் தொடர்பு, கூட்டிணைப்பும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்.

(2) *அலுவலக முறைமைகள்.-* அலுவலக முறைமையின் கோட்பாடுகள், அலுவலக நடவடிக்கை முறைகள், பதிவுகளும் கோவைப்படுத்தலும், படிவங்களை வடிவமைத்தலும் கட்டுப்பாடும், கடிதத்தொடர்பு, அலுவலக உபகரணங்களின் பயன்பாடு மீதான கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலமும் அதன் வளவும், தொழில் விவரணம், வேலை ஆய்வும் முறைகளின் ஆய்வும் வேலைச் சுமையை அளத்தல், அலுவலக தொழிற்பாட்டின் கையேடு.

(3) *தாபன நடைமுறைகள்.-* அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அரச உத்தியோகத்தர்களின் தாபன விடயங்கள், பெயர்வழிக் கோப்புகளைப் பேணுதல், அரச உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, சேவை முடிவுறுத்தல் என்பனவற்றுக்கான அதிகாரக் கையளிப்பு, நலனோம்பல் அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப்படும்.

(4) *அரச நிதி முகாமை.-* வருடாந்த மதிப்பீடுகளும் கணக்கீட்டு உத்தியோகத்தரொருவரின் பொறுப்புக்களும், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்பைக் கையளித்தல், பணத்தைப் பெறுதல், கணக்கீடும் ஏற்றலும், கொடுப்பனவுகள், அரசாங்க பணத்தின் கட்டுக்காப்பு, கட்டுநிதிகள், வங்கிக் கணக்குகளும் விநியோகங்களும் சேவைகளும், கேள்வி நடைமுறைகள், களஞ்சிய செவ்வை பார்ப்பு, கணக்காய்வு வினாக்கள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவின சாரம்சம், வங்கி கணக்கிணக்கக் கூற்றும் நிதி முகாமையில் பயன்படுத்தப்படும் ஏடுகளும், அரசாங்க நிதி தொடர்பாக இதற்குமுன் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் பற்றிய பொது அறிவு பரீட்சிக்கப் படும்.

(5) *பொது வினாத்தாள்.-* பொது நிர்வாகத்தின் இயல்பு, பொது நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரச கொள்கைகளும் சீர்திருத்தங்களும், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்பூட்ஸ்மன்), பொது முறைப்பாடுகளுக்கான பாராளுமன்றக் குழு, அலுவலக கலாச்சாரம், நன்னெறிகளும் விழுமியங்களும் முறையான அலுவலக சூழலை உருவாக்கலும், பதவியணியினரின் நலன்புரி நடவடிக்கைகளும், உத்தியோக மற்றும் சிவில் அந்தஸ்து மீதான சமூக அங்கீகாரம் அரச உத்தியோகத்தர்களின் கடப்பாடுகள்.

14. இவ்வொழுங்கு விதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கும், தீர்மானம் எடுப்பதற்கும் அமைச்சரவைக்கு/ அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

15. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2010, செத்தெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2010**

(வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசிக்கும், இரண்டு நகரங்களை விருப்பத்தின்படி ஒழுங்கு வரிசையாகக் குறிப்பிடவும்.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| (1) | |
| (2) | |

(வர்த்தமானி அறிவித்தலில் முதலாம் பந்தியைப் பார்க்கவும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

(சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4) ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

3. பால் :
(பெண்-1, ஆண்-0) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :

விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இல. :
☐☐☐☐☐☐☐☐☐☐

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.1 2010.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. இப்பரீட்சை 1972, 1973, 1974, 1975, 1976, 1978, 1979, 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின்/1985, 1999 அரச தட்டெழுத்தாளர் சேவையின்/ 1996 அரச சுருக்கெழுத்தாளர் சேவையின்/ 1999 அரச கணக்குப் பதியுநர் சேவையின்/ 1999 அரச சிறாப்பர் சேவையின் அல்லது 1999 அரச பண்டகசாலை காப்பாளர் சேவையின் அல்லது 2006, 2007 ஆம் ஆண்டுகளில் நடாத்திய அரச முகாமை உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்புக்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைகளில் எதற்காவது நீங்கள் தோற்றினீர்களா ? :----.

8. (i) பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு நியமனம்பெற்ற திகதி :----.

(ii) 2010.01.01 ஆந் திகதியன்றுள்ளவாறான மொத்தச் சேவைக் காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(iii) 2010.01.01 ஆந் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப் பகுதிக்குள் பெற்றுள்ள சம்பளமற்ற விடுமுறை நாட்கள் :----.

(iv) 2010.01.01 ஆந் திகதியன்றுள்ளவாறான முனைப்பான சேவைக்காலம் :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(v) பொது எழுதுநர் சேவையில்/தட்டெழுத்தாளர் சேவையில்/ அரச சுருக்கெழுத்தாளர் சேவையில்/ அரச கணக்குப் பதியுநர் சேவையில்/ அரச சிறாப்பர் சேவையில்/ அரச பண்டசாலை காப்பாளர் சேவையில் நியமனம் உறுதிப்படுத் தப்பட்ட திகதி :----.

(vi) தற்போது இருக்கின்ற வகுப்பும் அதில் உள்வாங்கப்பட்ட திகதியும் :----.

(vii) நீங்கள் பட்டதாரி ஆயின் பட்டம் பெற்ற ஆண்டும் பல்கலைக்கழகத்தின் பெயரும் :----.

(viii) பட்டம் செயல்வலுப் பெறும் திகதி (Effective date) :----.

9. (i) நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/ அரச கணக்குப் பதியுநர் சேவைக்கு/ அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

(ii) போட்டிப் பரீட்சை இன்றி நீங்கள் பொது எழுதுநர் சேவைக்கு/ அரச தட்டெழுத்தாளர் சேவைக்கு/ அரச சுருக்கெழுத்தாளர் சேவைக்கு/அரச சிறாப்பர் சேவைக்கு/ அரச பண்டசாலை காப்பாளர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் குறித்த சேவைக்குச் சேர்வதற்காக நீங்கள் தகைமையடைந்த மொழி மூலம் :----.

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில்-

(அ) 2010.01.01 ஆந் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்திற்கு கிடைக்கவேண்டிய சம்பள ஏற்றங்கள் எல்லாம் உழைத்துப் பெற்றுள்ளதுடன், (சேவைகள் மற்றும் திணைக்களப் பரீட்சைகளை நடாத்தும் நிபந்தனையான சம்பள ஏற்றம் தவிர்ந்த) அக்காலப் பகுதிக்குள் எவ்விதத்திலான ஒழுக்காற்று தண்டனை எதற்கும் ஆளாகவில்லை எனவும் ;

(ஆ) இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மை யானவை எனவும் நான் முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை எனவும்/ பரீட்சைக் கட்டணம் செலுத்திய ................................. ஆம் இலக்க, ....................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்/ பரீட்சைகள் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கு அமைய இப்பரீட்சை பற்றிய பிரமாணத்தின்படி நான் தகைமை அற்றவர் என தெரியவந்தால் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச்

செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான எத்தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ....................................... ............... எனும் விண்ணப்பதாரர் .................................. ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும், அவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதென்றும், மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் இவ்வலுவலகத்தில் உள்ள பதிவுகளின் ஆதாரமாக என்னால் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட்டதென்றும் அவை சரியானவை என்றும், இவர் முதல் முறையான பரீட்சைக்குத் தோற்றுவதால் பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விலக்களிப்பதற்கு தகுதியுடையவர் என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 13 ஆம் இலக்க 1972.10.02 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதப்படி அலுவலரின் வரலாற்றுத் தாளில் அதுபற்றி குறிக்கப்பட்டதென்றும் விண்ணப்பதாரர் பரீட்சைக்குரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும் 2010, ................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். இவர் அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட கடிதத்தின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ........................... ஆம் இலக்கமும் .......................... ஆந் திகதியுமாகும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

சான்றுப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு அதன்மேல் ஓரத்தில் மட்டும் ஒட்டும் பசை பூசி கவனமாக இங்கு ஒட்டிவிடவும். |

10-612

---

**உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

**கைத்தொழில் அபிவிருத்திக்கான வழிகாட்டி**

*உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாணவர்களை அனுமதித்தல் - 2011 ஆம் கல்வி ஆண்டு*

2009 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் புதிய அல்லது பழைய பாடத்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோருக்காக இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிப்பது எப்படி?**

கீழே காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை "அ" பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய உயர் தொழில்நுட்ப நிறுவன/பிரிவுக்கு (கொழும்பு) பார்க் வீதி, மக்கள் வங்கிக் கிளை அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் 025-100133397613 SLIATE கணக்கு இலக்கத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா 250 க்கான ரசீதை இணைத்து பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பாடநெறியை" குறிப்பிடல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக ரூபா 250 கட்டணத்தைச் செலுத்தி ரசீதுகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்துக்கு மாறாக வேறு இலக்கங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

'அ' பகுதியில் கிடைக்கத்தக்க கற்கை நெறிகள் தரப்பட்டுள்ளன. அவரவர் கல்வித் தகைமைகளுக்கேற்ப கற்கை நெறிகளை 'ஆ' பகுதியிலிருந்து விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்து விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் இடம்பெறும் முறைமை :**

காலை/முழுநேரக் கற்கைநெறி : கிழமை நாட்களில் பகல் நேரங்களில்

பகுதி நேர கற்கைநெறி : வார இறுதி நாட்களில் பகல் நேரங்களில்

(பகுதி நேர கற்கை நெறிகள் உரிய துறையில் தொழில் புரிவோருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

**கற்கை நெறிகளுக்கான கட்டணங்கள்.**- பகல் நேர பாடநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. அரை வருட காலத்துக்கான உயர் தேசிய டிப்ளோமா ஆங்கில பகுதி நேர மாணவர்களுக்கான பாடநெறிக் கட்டணம் நான்காயிரம் ரூபா (ரூ. 4,000), 1 ஆம், 2 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் இரண்டாயிரம் ரூபா (ரூ. 2,000), அரையாண்டுக்கான 3 ஆம், 4 ஆம் வருட உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் மூவாயிரம் ரூபா (ரூ. 3,000) இது வருடாந்தம் மாற்றப்படக்கூடியது. உயர் தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்ப பகுதி நேர மாணவர்களுக்கான கட்டணம் ஒரு தவணைக்கு பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000) (ஒரு வருடத்துக்கு இரண்டு தவணைகள்).

**நேர்முகப் பரீட்சை.**- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோர் எழுத்து மூலப் பரீட்சை அத்துடன்/அல்லது நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். க. பொ. த. (உ./த.) இல் பெற்றுக்கொள்ளப்பட்ட Z ஸ்கோர் அல்லது புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இது தொடர்பான திகதி, நேரம், இடம், சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் போன்ற விபரங்கள் எழுத்துமூலம் அறிவிக்கப்படும். மூலப்பிரதி இல்லாத பட்சத்தில் மூலப் பிரதிகள் மாணவப் பதிவின்போது சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் அதன் பிரதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

**விடுதி வசதிகள்.**- ATI நைவல/தெஹிவளையில் பெண் பிள்ளைகளுக்கு அம்பாறை ஹார்டி ATI இல் ஆண் பிள்ளைகளுக்கு போன்றே குறிப்பிட்ட இடவசதிகளே உள்ளன. இந்த வசதிகள் முழுநேர மாணவர்களுக்கு மட்டுமேயாகும். நிறுவனத்துக்கும் மாணவர்களின் வீட்டுக்கும் இடையில் உள்ள தூரத்தின் அடிப்படையிலேயே இது நிர்ணயிக்கப்படும்.

பகுதி "அ"

**உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/ATI பிரிவுகளின் விலாசங்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்**

| குறியீட்டு இல. | ATI/ ATI பிரிவின் பெயர் | விலாசங்கள் | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 01 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2714270, 011-2738349 |
| 02 | காலி உயர் தொழில்நுட்ப நிறுவனம், லபுதுவ | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதுவை, அக்மீமன | 091-2227880, 091-2246179 |
| 03 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பட்டிபொல வீதி, கண்டி | 081-2226644, 081-2232097 |
| 04 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2224911, 037-2229583 |
| 05 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 |
| 06 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 665/5, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் | 021-2222595 |
| 07 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், நைவல | நைவல, எஸ்ஸல்ல, வேயன்கொடை | 033-2287519, 033-2292544 |
| 08 | ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2223035, 063-2222056 |
| 09 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232, 026-2222593 |
| 10 | உயர் தொழில்நுட்ப நிறுவனம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297 - |
| 11 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, புதிய நகரம், அநுராதபுரம் | 025-2234417 - |
| *12 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, இரத்தினபுரி | இல. 14, புதிய நவீன சந்தை, இரத்தினபுரி | 045-2230780 - |
| 13 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 - |
| 14 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி, மஞ்சந்துடுவை, மட்டக்களப்பு | 065-2247519 - |
| *15 | உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு, தங்காலை | வலயக் கல்வி அலுவலகம், தங்காலை | 047-2240267, 091-2246179 |

* இரத்தினபுரி மற்றும் தங்காலை ATI பிரிவுகளின் விலாசங்கள் 2011, சனவரி அன்று மாற்றப்படும்.

**நிறுவனங்களின் பாடநெறிகளின் பெயர் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்**

| பாடநெறிகளின் பெயர் | காலம் | பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற நிறுவனங்களின் குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி.) பகல்/முழுநேரம் | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 13, 14 |
| 1.1 உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ. தே. க. டி.) பகுதி நேரம் (ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழி மூலம்) | 4 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 9, 11, 12, 13, 14, 15 |
| 2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (உ. தே. மு. டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடம் | 1, 2, 3, 4, 5, 6 |

| பாடநெறியின் பெயர் | காலம் | பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற நிறுவனங்களின் குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 3. உயர் தேசிய வியாபார நிர்வாக டிப்ளோமா (உ. தே. வி. நி. டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடம் | 1, 2, 3, 5, 6 |
| 4. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (உ.தே.த.தொ.டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 |
| 4.1 உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (உ.தே.த.தொ.டி.) பகுதி நேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 வருடம் | 5, 6 |
| 5. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப விவசாய டிப்ளோமா (ஆங்கில மொழி மூலம்) (உ.தே.தொ.வி.டி.) (விவசாயம்) பகல்/முழுநேரம் | 3 வருடம் | 2, 7, 8 |
| 6. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. டி. ஆங்கிலம்) பகல்/முழுநேரம் | 2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8, 10 |
| 6.1 உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (உ. தே. டி.ஆங்கிலம்) பகுதி நேரம் | 2 1/2 வருடம் | 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 10, 11, 13, 14 |
| 7. உயர் தேசிய வியாபார நிதி டிப்ளோமா (உ. தே. வி. நி. டி.) பகல்/முழுநேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2வருடம் | 1 |

**குறிப்பு** :

1. சகல பாடநெறிகளினதும் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. சில பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு அமைய 2011 இல் ஆரம்பிக்கப்படும். அத்துடன் அந்தப்பாடநெறிகளின் காலமும் மாற்றப்படலாம்.

2. முதலாம் மற்றும் இரண்டாவது வருடங்களுக்கு உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பாடத்திட்டத்தின் (பகல்/முழுநேரம்) போதனா மொழி மூலம் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாகும். அத்துடன் வார நாட்களில் மாத்திரம் நடாத்தப்படும். மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளின் பாடநெறி வார இறுதி நாட்களில் மாத்திரம் நடாத்தப்படும். அத்துடன் அதன் போதனா மொழி ஆங்கிலம் ஆகும்.

3. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (பகல்/முழுநேரம்) முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகள் பாடநெறி வார நாட்களில் பகல் மாத்திரம் நடாத்தப்படும். அத்துடன் மூன்றாம் ஆண்டு வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்.

4. க. பொ. த. (உ/த) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் பொதுப் பரீட்சை தாளில் ஒரு சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

5. க. பொ. த. (உ/த) பரீட்சையில் பெற்ற Z Score அல்லது சராசரி புள்ளிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

6. தகைமை பரீட்சையில் பாடத்தில் அல்லது பாடநெறிக்கு சம்பந்தமான துறையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

7. பகல் நேர பாடநெறிகளுக்காக 22 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

8. குறிப்பிட்ட ATI அல்லது ATI பிரிவிற்கு முழுநேர பாடநெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்பு எக்காரணம் கொண்டும் வேறு உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் எந்தவொரு மாணவரும் மாற்றப்பட மாட்டார்.

பகுதி "ஆ"

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :-

1. **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (பகல்/ முழுநேரம்).**- விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்திபெற்றிருத்தல். அந்தப் பாடங்களில் ஒன்றாக தூயகணிதம் அல்லது கணக்கியலுடன் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
கணிதம் அல்லது கணக்கியலில் ஒரு திறமைச்சித்தி இல்லாவிடத்து க. பொ. த. (சா/த) பரீட்சையில் இந்தப் பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் பிரதான பதிலீடாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
க. பொ. த. (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூயகணிதம் அல்லது கணக்கியலில் ஏதாவது ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ஒரு பதிலீடாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களில், இணைந்த கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும். இம்மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது இரண்டு

திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில் நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(iv) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ/த) பரீட்சை பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் பெற்ற ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெறும்.

1.1 **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - உ. தே. க. டி. (பகுதி நேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்ற பட்டம் அல்லது இடைநிலைப் பரீட்சை.

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்), மூன்று பாடங்கள் (புதிய பாடத்திட்டத்தில்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற வியாபாரக் கற்கையில் (கணக்கியல் குரூப்) தேசிய சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய கணக்கியல் சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

**குறிப்பு :**

(அ) ***தொழில் அனுபவம்.***- விண்ணப்பதாரிகள் பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றில்/பொது நிறுவகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதலாம் வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இக்கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கு, ஏனைய அனுமதித் தகைமைகளைப் பூர்த்திசெய்து, இடமிருப்பின் அனுமதிக்கப்படுவர் :-

(1) வியாபார கற்கை/நிதி தொடர்பான தேசிய டிப்ளோமா
(2) உயர் தேசிய வர்த்தக/முகாமைத்துவ டிப்ளோமா, இரண்டாம் ஆண்டு
(3) விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்)
(4) வணிகமாணி
(5) விஞ்ஞானமாணி (கணக்கியல்)
(6) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) 1 ஆம், 2 ஆம் பகுதி
(7) பட்டயக் கணக்காளர், கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) 1 ஆம், 2 ஆம் பகுதி
(8) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் (AAT) 3 ஆம் கட்டப் பகுதி.

2. **தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா - தே. மு. டி. (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களிலும்/க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களிலும், க. பொ. த. (சா. த.) இல் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்றை நெறிக்கான தேசிய சான்றிதழ் (பொது நிர்வாகம்/சந்தைப்படுத்தல்) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **தேசிய உயர் வியாபார நிர்வாக டிப்ளோமா - (தே. உ. வி. நி. டி.) (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் பொருளியல், வர்த்தகமும் நிதியும் மற்றும் கணக்கியல் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஏதாவது இரண்டிலும் அரசியல் விஞ்ஞானம்,

தூயகணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், அளவையியல், வரலாறு, வியாபாரக் கல்வி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) பொருளியல், வியாபாரக் கல்வி மற்றும் கணக்கியல் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஏதாவது இரண்டிலும் புவியியல், மனைப்பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞான முறைமையும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், வியாபாரக் கல்வி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **உயர் தேசிய வியாபார தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - (உ. தே. த. தொ. டி.) (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iv) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்/*விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(v) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

* 1995 புதிய பாடத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் க. பொ. த. (உ. த.) விவசாய விஞ்ஞானம்.

5. **உயர் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (உ. தே. தொ. டி.) (விவசாயம்) (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

6. **தேசிய உயர் ஆங்கில டிப்ளோமா (HND in English) (முழுநேரம்/பகுதி நேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச்சித்தி அடங்கலாக 3 பாடங்களில் சித்தி அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி அல்லது

(iii) ஆங்கில சிறப்பு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்களுக்கான தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் ;

(iv) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொது ஆங்கிலத்திலும் திறமைச் சித்தியுடன் ஏனைய 3 பாடங்களிலும் சித்தி ; அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகக் கைத்தொழிலும் மேலதிகக் கல்வியும் தொடர்பான ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்தியுடன் பயிற்சியையும் நிறைவுசெய்திருத்தல் அல்லது அதற்குச் சமனான கல்வித் தகைமை.

7. **தேசிய உயர் வர்த்தக கல்வி டிப்ளோமா (பகல்/முழுநேரம்).**- விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி ;

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வியாபாரக் கல்வி மற்றும் கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் அதே பரீட்சையில் புவியியல், மனைப்பொருளியல், அரசியல் விஞ்ஞானம், அளவையியலும் விஞ்ஞான முறைமையும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி.

**குறிப்பு** :

(1) தமிழ் மொழி மூலமான உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம்) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை, மட்டக்களப்பு, கண்டி, தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாத்திரமே கற்பிக்கப்படும். சிங்கள மொழி மூலமான உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம்) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை, மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய சகல உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களிலும் கற்பிக்கப்படும். ஆங்கில மொழி மூலமான உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம்) தெஹிவளை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் மாத்திரமே கற்பிக்கப்படும்.

(2) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட வர்த்தக பட்டப்படிப்புக்கு (சாதாரண சித்தி) சமனான, 2008, ஒற்றோபர் 46/90 (iii) சுற்றுநிருபத்தால் செல்லுபடியாக்கப்பட்ட கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்.

(3) உங்கள் தகுதி அடிப்படையில் உங்களால் குறிப்பிடப்படும் கல்வித் திட்டங்களுக்கான தெரிவுகள் பிரவேசங்களுக்காக ஆலோசிக்கப்படும்.

2011 கல்வியாண்டு உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/பிரிவுகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் சம்பந்தமாக SLIATE இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதென்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 29.10.2010.

எச். ரீ. கமல் பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 18/2, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.
Web Site : www.sliate.net

*Office use only* | Course Number : ..........................................

*SPECIMEN APPLICATION FORM*

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

***ADMISSION TO HIGHER NATIONAL DIPLOMA/NATIONAL DIPLOMA COURSE***

Name of the Institute/Institute Section :........................................................

| *Name of the Course* | *Order of Preference* | *Medium* |
|---|---|---|
| 1 ............................. | ........................................... | ................................ |
| 2 ............................. | ........................................... | ................................ |
| 3 ............................. | ........................................... | ................................ |

1. Name with initials :................................................................................................................

2. Name/Names denoted by Initials :.......................................................................................
.................................................................................................................................................

3. Address :................................................................................................................................
.................................................................................................................................................

4. Date of Birth :
Year :.......................... Month :.......................... Date :..........................

Age (as at 01.01.2011) : Years :..................... Months :..................... Days :...............

5. National Identity Card No. :..................................................................................................

6. Sex : (Male/Female) :...............................................................................................................

7. Administrative District :........................................................................................................

8. (i) Results of G. C. E. (A/L) Examination (In or Before 2009)

Year : ............................. Index No. :............................. Medium :.............................

| *Pass Subjects* | *Grade* |
|---|---|
| 1. ...................................... | ...................................... |
| 2. ...................................... | ...................................... |
| 3. ...................................... | ...................................... |
| 4. ...................................... | ...................................... |

If under New Syllabus, indicate pass or fail in the General Paper :......................................

Aggregate/Average Marks or Z-Score of the above examination, issued by the Department of Examinations :..............................

(ii) Results of G. C. E. (O/L) Examination :

Year : ............................ Index No. :............................ Medium :............................

| *Subject* | *Grade* | *Subject* | *Grade* |
|---|---|---|---|
| 1. .......................... | .......................... | 6. .......................... | .......................... |
| 2. .......................... | .......................... | 7. .......................... | .......................... |
| 3. .......................... | .......................... | 8. .......................... | .......................... |
| 4. .......................... | .......................... | 9. .......................... | .......................... |
| 5. .......................... | .......................... | 10. .......................... | .......................... |

9. Highest Qualification in English as a subject : ......................................

10. Details of Occupation :- Date of Appointment :................................
(only for part-time/week-end courses)
Post :......................................
E. P. F. Number :......................................
Place of Work and Address :......................................

I hereby declare that I am not following any other full-time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full-time course at any other state institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

......................................,
Signature of Applicant.

Date :-----.

(The Bank receipt for Rs. 250 payable to SLIATE should be annexed)

10-633

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.